புரட்சிப் பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2050 | செப்டம்பர் 26, 2019 | புரட்சி 18 | முழக்கம் 37 | விலை: ரூ.3.00

# எழுச்சி நடைபோட்டது பள்ளிபாளையம் கழக மாநாடு



'சமூக நீதியைப் பறிக்காதே; புதிய கல்வித் திட்டத்தைத் திணிக்காதே' என்ற முழக்கங்களை முன் வைத்து திராவிடர் விடுதலைக் கழகம் நடத்திய மண்ணின் மைந்தர்களுக்கான பரப்புரைப் பயணக் குழுக்கள் கடந்த செப்டம்பர் 20ஆம் தேதி நாமக்கல் மாவட்டம் பள்ளிபாளையத்தில் ஒன்று சேர்ந்தன. சென்னை, விழுப்புரம், மயிலாடுதுறை, திருப்பூர், கோபி, மேட்டூரிலிருந்து கழக செயல்பாட்டாளர்கள், பெண்களும் ஆண்களும் மக்களைச் சந்தித்து தமிழகத்தைச் சூழ்ந்து நிற்கும் வேலை, கல்வி உரிமைகள் பறி போகும் ஆபத்துகளை எடுத்து விளக்கினர். கலை நிகழ்வுகள், மேடைப் பேச்சுகள், துண்டறிக்கைகள், நூல்கள் வழியாக மக்களிடம் கருத்துகள் கொண்டு போய் சேர்க்கப் பட்டன. கட்சிகளைக் கடந்து கிராமங்களிலும் நகரங்களிலும் மக்கள் பேராதரவுடன் இந்தப் பரப்புரைப் பயணம் நடந்தது குறிப்பிடத்தக்கது.




செப். 20ஆம் தேதிபிற்பகல் பயணக் குழுவினர் பள்ளிப்பாளையம் நோக்கி வரத் தொடங்கினர். நேரு திடலில் நிறைவு விழா மாநாடு மாலை 6 மணியளவில் கலை நிகழ்ச்சிகளுடன் தொடங்கியது. மேட்டூர் டி.கே.ஆர். குழுவினரின் இசை நிகழ்ச்சி, விழுப்புரம் பயணக் குழுவினர் மற்றும் மேட்டூர் பயணக் குழுவினர் இணைந்து நிகழ்த்திய பறை இசை, மேட்டூர் தோழர்கள் அரங்கேற்றிய உணர்ச்சி மயமான வீதி நாடகங்கள், சென்னை பயணக் குழு வில் இடம் பெற்ற நாத்திகனின் எழுச்சிப் பாடல்கள் அனைத்தும் பார்வையாளர்களுக்கு உணர்வூட்டின. எட்டு மணி வரை கலை நிகழ்ச்சிகள் தொய்வின்றி நடந்தன.

### பயணக் குழுவின் அனுபவப் பகிர்வு

பிறகு பயணக் குழுக்களின் சார்பில் குழுவில் இடம் பெற்ற தோழர்கள் பயணத்தில் மக்கள் வெளிப்படுத்திய ஆதரவு பல்வேறு அமைப்புகள், கட்சியினர் தந்த வரவேற்புகளைப் பகிர்ந்து கொண்டனர். மகேஷ் (மயிலாடுதுறை), சூலூர் பன்னீர் செல்வம் (திருப்பூர்-கோவை), வேணுகோபால் (கோபி), கோவிந்தராஜ் (மேட்டூர்), இரா. உமாபதி (சென்னை), அய்யனார் (விழுப்புரம்) ஆகியோர் பயண அனுபவங்களைப் பகிர்ந்தனர்.

தொடர்ந்து மாநாடு தொடங்கியது. நாமக்கல் மாவட்ட அமைப்பாளரும் மாநாட்டுப் பணிக் குழுவில் முன்னின்று செயல்பட்டவருமான கழக செயற்பாட்டாளர் அ. முத்துப்பாண்டி மாநாட்டுக்குத் தலைமை தாங்கினார். நாமக்கல் மாவட்டக் கழகத் தலைவரும் மூத்த பெரியாரியல்வாதியுமான குமாரபாளையம் மு.சாமிநாதன் வரவேற்புரையாற்றினார். நாமக்கல் மாவட்ட செயலாளர் மு.சரவணன், அ. மீனா (பள்ளிபாளையம் கழக நகரத் தலைவர்), ச. சஜீனா (நகர கழகச் செயலாளர்) முன்னிலை வகித்தனர். இவர்கள் மாநாட்டுப் பணிகளில் பெரும் பங்காற்றியவர்கள்.

தொடர்ந்து அமைப்புச் செயலாளர் ஈரோடு இரத்தினசாமி, வெளியீட்டுச் செயலாளர் இராம. இளங்கோவன், பரப்புரைச் செயலாளர் பால். பிரபாகரன், பொருளாளர் திருப்பூர் துரைசாமி உரையாற்றினர். நிறைவாக கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், கழகத் தலைவர் கொளத்தூர் மணி உரையாற்றினர். பள்ளிபாளையம் நகர கழகத் தோழர் தியாகு நன்றி கூறினார். பரப்புரைச் செயலாளர் பால். பிரபாகரன் நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினார். தீர்மானங்களையும் முன்மொழிந்தார்.

### எழுச்சி; உற்சாகம்

மாநாட்டு நிகழ்வுகள் நடைபெறும் இடத்தில் பெரியார், அண்ணா, கலைஞர், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், காமராசர், அம்பேத்கர், காரல்மார்க்ஸ், லெனின், அயோத்திதாசர், பார்ப்பனரல்லாத தலைவர்கள் சுப்பராயன், முத்துலட்சுமிரெட்டி, சர் பிட்டி தியாகராயர், சர். ஏடி பன்னீர்செல்வம், மூவலூர் இராமாமிர்தம், அன்னை மணியம்மையார், பனகல் அரசர், நடிகவேள் எம்.ஆர். ராதா, கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன், தமிழ் ஈழத் தேசியத் தலைவர் மாவீரர் பிரபாகரன், பெண்புலி அங்கயற்கண்ணி ஆகியோர் படங்களுடன் அவர்களது கருத்துகள் அடங்கிய பதாகைகள் அமைக்கப்பட்டிருந்தன. பயணக் குழு தோழர்கள், 'இஆர்' திரையரங்கிலிருந்து உணர்ச்சி முழக்கங்களுடன் மேடை நோக்கி பேரணியாக வந்தனர். கருஞ்சட்டை இளைஞர்களின் அணிவகுப்பை ஏராளமான பொது மக்கள் இருபுறமும் நின்று பார்த்தனர். பெரியார் இயக்கம், இளைய தலைமுறையிடம் வந்து சேர்ந்து விட்டதை உணர்த்துவதாக இருந்தது இந்தப் பேரணி.

மாநாடு நிறைவடைந்தவுடன், பயணக் குழுவினருக்கு மாநாட்டு வரவேற்புக் குழுவினர் சுவையான மாட்டுக் கறி உணவை அவர்கள் இருக்கைக்கே வந்து வழங்கினர். கழகக் குடும்பங்கள் ஒருவரையொருவர் சந்தித்து அன்பையும் நட்பையும் பகிர்ந்து கொண்டனர். குழுக்களாக படம் எடுத்தனர்.

பயணக் குழுவினருக்கு மேடையில் கழகத் தலைவர், பொதுச் செயலாளர் சான்றிதழ்களை வழங்கினர். பயணக் குழுவினர் தனித்தனியாக படம் எடுத்துக் கொண்டனர். மக்களை சந்தித்த மனநிறைவோடு பெரியாரின் பாசறையான திராவிடர் விடுதலைக் கழகத்தின் தோழர்கள் விடைபெற்று, பயணம் வந்த தனித் தனி வாகனங்களில் ஊர் திரும்பினர். அடுத்து அக்.2ஆம் தேதி புதிய கல்வித் திட்ட நகல் கிழிப்புப் போராட்டத்துக்கு தோழர்கள் தயாராகி வருகிறார்கள்.

– நமது செய்தியாளர்

# காமராசர் நினைவு நாளான அக்.2இல் புதிய கல்விக் கொள்கை நகல் கிழிப்பு ஆர்ப்பாட்டம்

***பள்ளிபாளையம் கழக மாநாட்டில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி முன்மொழிந்த தீர்மானம்.***

*ஆரியர்களின் வேத காலத்திலிருந்தே, பெரும்பான்மை உழைக்கும் மக்களான 'சூத்திர பஞ்சம' மக்களின் கல்வி உரிமைகள் பறிக்கப்பட்டு வந்துள்ளன. உரிமை மறுக்கப்பட்ட மக்களுக்கான அடிப்படை கல்வி உரிமை தடையின்றி கிடைக்கவும், உயர் கல்வியை நோக்கி அவர்கள் முன்னேறிச் செல்வதற்குமான இலகுவான சமூகச் சூழலை உருவாக்கி சமூக நீதி அடிப்படையிலான கல்விக் கொள்கையை தமிழ்நாட்டில் நாம் உருவாக்கி வைத்துள்ளோம். அதை முழுமையாக சிதைத்து வெகு மக்களிடம் கல்வி சென்று அடைந்து விடக் கூடாது என்ற உள்நோக்கத்துடன் தடைகளை எழுப்பி கல்வி அனைவருக்கும் பரவிடாது தடுக்கவே புதிய கல்விக் கொள்கை வந்துள்ளது. புதிய கல்விக் கொள்கையின் நோக்க உரையிலேயே இது வெளிப்படையாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. "சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து எல்லோருக்கும் கல்வி - சமமான கல்வி வழங்குவதிலேயேதான் நாம் முயற்சித்தோமே தவிர, அதை விட முக்கியமான 'தரமான கல்வி' பற்றி கவலைப்படவே இல்லை என்று அறிக்கையின் நோக்கவுரையே வெளிப்படையாகவே பார்ப்பனிய மனு சாஸ்திரத்தை பச்சையாக வெளிப்படுத்தி இருக்கிறது.* (In the decades since independence we have been preoccupied largely with issues of access and equity and have unfortunately dropped the baton with regard to quality of Education).

*14 வயது உள்ள அனைவருக்கும் கட்டாய இலவசக் கல்வியை உறுதி செய்யும் கல்வி உரிமைச் சட்டம் 'சூத்திரர்களுக்கு கல்வியைத் தராதே' என்ற மனு சாஸ்திரத்திற்கு எதிராக வந்தது தான். இந்த நிலையில், அதன் நோக்கத்தை சிதைக்க புதிய கல்விக் கொள்கை பல்வேறு சூழ்ச்சியான திட்டங்களை முன் வைத்துள்ளது. ஐந்தாம் வகுப்பு எட்டாம் வகுப்பு மாணவர்களுக்குப் பொதுத் தேர்வு என்பதன் வழியாக வடிகட்டுதல், உயர்கல்விக்கான வழிகளைத் தடுத்து நிறுத்துதல், வேதப் பெருமைகளை கல்வித் திட்டத்தில் இணைத்தல் என பல்வேறு பார்ப்பனிய நச்சுக் கருத்துக்களை செயல்படுத்த வலியுறுத்துகிறது. மீண்டும் வேதகாலத்திற்கு இழுத்துச்செல்லும் இந்த ஆபத்தான கல்விக் கொள்கையை இம்மாநாடு வன்மையாக கண்டிக்கிறது.*




*இந்த மனுதர்ம கல்விக் கொள்கையைத் தமிழர்கள் ஏற்கமாட்டார்கள் என்பதை வெளிப்படுத்திட கல்விப் புரட்சிக்கு அடித்தளமிட்ட கல்வி வள்ளல் காமராசர் அவர்களின் நினைவு நாளான அக்டோபர் இரண்டாம் நாள் புதிய கல்வித் திட்ட நகல்களைக் கிழித்தெறியும் ஆர்ப்பாட்டத்தை ஒத்த கருத்துடைய இளைஞர்கள், மாணவர்கள் அமைப்புகளைத் திரட்டி மாவட்டத் தலைநகரங்களிலும், வாய்ப்புள்ள பகுதிகளிலும் நடத்துவது என இம்மாநாடு தீர்மானிக்கிறது.*

## நடுவண் அரசுப் பணிகளுக்கு மாநில அளவிலே தேர்வு நடத்துக!

*தமிழ்நாட்டில் நடுவண் அரசுப் பணிகளில் பிற மாநிலத்தவர் ஆக்கிரமிப்பைத் தடுக்க மத்திய அரசு பணிகளுக்கான தேர்வுகளை அகில இந்திய அடிப்படையில் நடத்தாமல் மாநில அளவிலான தேர்வாக நடத்த வேண்டும் என்பதோடு, வினாத்தாள்கள் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் மட்டுமே இருத்தல் வேண்டும் என்ற கோரிக்கையை நடுவண் அரசிடம் தமிழக அரசு வலியுறுத்த வேண்டும் என்று இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது. பாரதிய ஜனதா கட்சி ஆட்சி நடத்தும் குஜராத் மாநிலத்திலேயே இந்த கோரிக்கை வலியுறுத்தப்பட்டதைத் தமிழக அரசுக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறோம். நடுவண் அரசின் பொதுத்துறை நிறுவனமான இந்தியன் ஆயில் கார்ப்பரேஷனில் 2017 ஆம் ஆண்டு நடந்த பணியாளர்த் தேர்வில் 116 வேலை வாய்ப்புகளில் 15 மட்டுமே கிடைத்த நிலையில், குஜராத்தியர் புறக்கணிக்கப்பட்டதை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்கள். அந்த வழக்கில் குஜராத் மாநில அரசும் தன்னை இணைத்துக் கொண்டு குஜராத்திகளுக்கே வேலை வழங்கக் கோரியது.*

*அதுமட்டுமின்றி குஜராத்தில் 85 விழுக்காடு வேலை வாய்ப்புகளை குஜராத்தியருக்கு வழங்கப்பட வேண்டும் என்ற சட்டம் 1995 முதல் குஜராத்தில் நடைமுறையில் இருப்பதையும், அந்த கொள்கையை சுட்டிக்காட்டியே மேற்குறிப்பிட்ட வழக்கில் குஜராத் அரசு வழக்காடியது என்பதையும் இம்மாநாடு தமிழக அரசுக்கு சுட்டிக்காட்டுகிறது.*

**– பள்ளிபாளையம் மாநாட்டுத் தீர்மானம்**

## தமிழக அரசுப் பணியாளர் தேர்வு ஆணையத்தின் திருத்தப்பட்ட விதியைத் திரும்பப் பெறுக!

*தமிழக இளைஞர்களின் வேலைவாய்ப்புகளுக்காக செயல்படவேண்டிய தமிழக அரசு, தமிழக அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் (TNPSC) விதிகளைக் கடந்த 2016ஆம் ஆண்டு நவம்பர் 7ஆம் நாள் திருத்தி அமைத்தது. இந்தத் திருத்தத்தின் காரணமாக, வெளி மாநிலத்தவர் தமிழக அரசுப் பணிவாய்ப்புகளைப் பறிப்பதற்கு தமிழக அரசால் கதவு திறந்து விடப்படுள்ளது.*

*இதன் காரணமாக கடந்த 2019, மே மாத இறுதியில் நடத்தப்பட்ட மின்வாரிய உதவிப் பொறியாளர் பணியிடங்களில் 39 இடங்களைப் பிற மாநிலத்தவர்கள் பெற்றுவிட்டனர்.*

*அதுபோலவே கடந்த 2017 ஆம் ஆண்டு நடந்த அரசினர் தொழில்நுட்பக் கல்லூரி விரிவுரையாளர்கள் பதவிகளிலும் இதுவே நடந்தது. மின்னணு தொடர்பியல் துறைக்கான விரிவுரையாளர்களுக்கான 36 பதவிகளில் 31ஐயும், இயந்திரப் பொறியியல் துறைக்கான விரிவுரையாளர் பணிகள் 67இல் 46 பணிகளையும் வெளிமாநிலத்தவர் தேர்வு செய்யப்பட்டனர்.*

*தமிழக இளைஞர்களின் வேலைவாய்ப்புகளை வெளிமாநிலத்தவர்கள் பறிக்க வழிவகுக்கும் 26.11.2016இல் திருத்தப்பட்ட விதிகளை தமிழக அரசு உடனடியாகத் திரும்பப் பெற வேண்டும் என்று இம்மாநாடு வலியுறுத்துகிறது.*

**– பள்ளிபாளையம் மாநாட்டுத் தீர்மானம்**

## மண்ணின் மைந்தருக்கே வேலை: தமிழகத்தில் சட்டம் நிறைவேற்றுக!

*தமிழ்நாட்டில் பல இலட்சம் இளைஞர்கள் வேலை வாய்ப்புகள் இல்லாமல் தவிக்கும் நிலையில், மத்திய அரசுப் பணிகளிலும் பொதுத்துறை நிறுவனங்களிலும் வட நாட்டுக்காரர்கள் ஏராளமாக குவிக்கப்பட்டு வருகிறார்கள். இந்த நிலை தொடர்ந்தால் அடுத்த சில ஆண்டுகளில் தமிழ்நாட்டின் அடையாளமே அழிந்துபோகும் ஆபத்தை நாம் சந்திக்க வேண்டி வரும். வேலை வாய்ப்புகளை அழிப்பது மட்டுமல்லாமல் தமிழ்நாட்டையே வடநாட்டுப் பண்பாட்டில் மூழ்கச் செய்யும் ஆபத்தும் இதில் அடங்கியுள்ளது.*

*இந்த பேராபத்தைத் தடுக்க, மகாராஷ்டிரா ஆந்திரா இராஜஸ்தான் மாநில அரசுகளைப் பின்பற்றி, தமிழ்நாட்டில் குறைந்தது 75 விழுக்காட்டு வேலைவாய்ப்புகளை - தனியார் தொழில் நிறுவனங்களிலும், உற்பத்தி நிறுவனங்களிலும் தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு உறுதி செய்யும் சட்டத்தை தமிழக அரசு உடனடியாக கொண்டுவர வேண்டும் என்று இம்மாநாடு வலியுறுத்துகிறது.*

*இதுவே தமிழ்நாட்டின் ஒருமித்த உணர்வாக இருப்பதைத் தமிழக அரசு உணர வேண்டும் என்றும் மாநாடு சுட்டிக்காட்ட விரும்புகிறது.*

**– பள்ளிபாளையம் மாநாட்டுத் தீர்மானம்**



# அமெரிக்காவில் டிரம்ப்–மோடியை வரவேற்ற இந்துத்துவ பார்ப்பனர்கள் பின்னணி என்ன?

***இந்தியாவுக்கு விசுவாசமின்றி அமெரிக்காவிடம் மட்டுமே தேசப்பற்று காட்டுவோம் என்று உறுதிப் பத்திரம் தந்து, அமெரிக்க குடிமக்களாகப் பதிவு செய்த பார்ப்பனர்கள் மற்றும் உயர்ஜாதிப் பிரிவினர் மோடிக்கு அமெரிக்காவில் பாராட்டு விழா நடத்தினார்கள். மோடியின் பார்வையில் இவர்கள் 'தேச விரோதிகள்' என்றாலும் பார்ப்பனர்களாக இருப்பதால் தேசபக்தர்களாகி விடுகிறார்கள். இந்தக் கேள்விகளை எழுப்பி 'இந்து' ஆங்கில நாளேடு வெளியிட்டுள்ள கட்டுரையின் சுருக்கம்.***

டிரம்ப் - மோடி பங்கேற்ற அமெரிக்காவின் ஹுஸ்டன், டெக்சாஸ் மாநிலங்களில் நடந்த பேரணியில் (மக்கள் கூடுகை) 50,000 அமெரிக்க இந்தியர்கள் பங்கேற்றதாக செய்திகள் வந்துள்ளன. டிரம்ப், மோடியின் அரசியல் கொள்கை ஒரு பகுதி அமெரிக்க இந்தியர்களுக்கு உற்சாகம் தரலாம். ஆனால் பெரும்பான்மை மக்களுக்கு நெருக்கடியை உருவாக்குவதோடு அவர்களுக்கிடையே சமூகத்தில் பிளவுகளை கூர்மைப்படுத்தும் ஆபத்தும் அடங்கியுள்ளது.

இந்தப் பேரணியில் பங்கேற்றவர்களில் பெரும்பான்மையான அமெரிக்க இந்தியர்கள் யார்? அமெரிக்காவின் குடிமக்களாக தங்களை மாற்றிக் கொண்டவர்கள். அமெரிக்கக் குடிஉரிமைக்கு உரிமை கோர வேண்டுமானால் அவர்கள் ஒரு உறுதி ஏற்றாக வேண்டும். இது அமெரிக்காவின் சட்ட நடைமுறை. அமெரிக்கக் குடிமகனாக/குடிமகளாக/ நான் மாறியப் பிறகு வேறு நாட்டோடு இருந்த ஈடுபாடு, விசுவாசத்திலிருந்து முற்றும் முழுவதுமாக என்னை விடுவித்துக் கொள்கிறேன். (Absolutely and entirely renounce and abjure all allegiance and fidelity to any foreign state)

இந்தியாவிலிருந்து அமெரிக்காவுக்குப் போனவர்கள் இப்படி உறுதி மொழியேற்று இந்தியாவின் மீது விசுவாசமோ ஈடுபாடோ கொள்ள மாட்டேன் என்று உறுதி ஏற்றவர்கள்தான் இந்தப் பேரணியில் பங்கேற்ற பெரும்பான்மையினர். பங்கேற்ற மற்றவர்கள் இப்படி ஒரு உறுதியை ஏற்கும் நல்வாய்ப்பு எப்போது கிடைக்கும் என்று காத்திருப்பவர்கள். அதாவது அமெரிக்கக் குடிமகன் / குடிமகள் உரிமைக்காகக் காத்திருப்பவர்கள். இவ்வளவுக்குப் பிறகும் மோடியின் முன் 'பாரத் மாதாக்கி ஜே' என்று முழங்கினார்கள். 'வந்தே மாதரம்' பாடலைப் பாடினார்கள். கடந்த முறை மோடி அமெரிக்கா வந்தபோது, இவையெல்லாம் அரங்கேறின.

ஒரு நாட்டின் குடிமகன் வேறு ஒரு நாட்டுக்கு விசுவாசமாக இருப்பது கூடாது; அது தேச விரோதம் என்ற கருத்து இயல்பாக ஏற்கப்படுகிறது என்றாலும், அமெரிக்காவைப் பொறுத்தவரை 'இரட்டைக் குடியுரிமை'யும் அனுமதிக்கப்படுகிறது. ஒருவரே இந்தியக் குடியுரிமையோடு அமெரிக்கக் குடியுரிமையும் பெறலாம். ஆனால் இந்தியாவில் இந்த உரிமை கிடையாது. ஆனாலும் இரண்டு நாடுகளுமே பல்வேறு கலாச்சாரங்களை ஏற்றுள்ள பன்முகத் தன்மைக் கொண்ட நாடுகள். இதற்கு நேர்மாறாக டிரம்ப் - மோடி இருவருமே பன்முகக் கலாச்சாரத்தை அழித்து ஒற்றைத் தேசமாக்க வேண்டும் என்ற இனத் தூய்மை கொள்கையை நடைமுறைப்படுத்தத் துடிப்பவர்கள்.

இதற்காக இரு நாடுகளின் அரசுகளும் மக்களை மத, இன அடிப்படையில் தனிமைப்படுத்துதல், ஒதுக்கி வைத்தல், அடையாளங்களை அழித்தல், குடி உரிமை மறுத்தல் போன்ற தீவிர செயல்திட்டங்களை அமுல்படுத்தி வருகின்றன. இந்தியாவை 'இந்துத்துவா' நாடாக மாற்ற ஒரே மொழி, ஒரே தேர்தல், ஒரே மதம் என்று வேகம் வேகமாக செயல்படும் மோடியும் - அதே கொள்கையை அமெரிக்காவில் மைனாரிட்டிகளுக்கு எதிராக செயல்படுத்தி வரும் டிரம்பும், மைனாரிட்டி எதிர்ப்பு, மைனாரிட்டி அடையாள சிதைப்புகள் வழியாக தங்களை செல்வாக்கு மிக்க தலைவர்களாக அடையாளப்படுத்தி வருகிறார்கள். சொந்த நாட்டில் 'தேச பக்தி' பேசும் மோடி, அமெரிக்காவின் இந்தியர்களிடையே இரு நாடுகளிடமும் விசுவாசமாக இருக்க வேண்டும் என்று வற்புறுத்துகிறார். வெளிச்சம் போடும் விழாக்களில் பங்கேற்பது வழியாக அமெரிக்க குடிமக்களிடையேயும் தனது செல்வாக்கை நிலைநிறுத்த விரும்புகிறார். அமெரிக்காவில் தனக்கு மிகப் பெரும் வரவேற்பும் புகழ் மாலைகளும் கிடைப்பதைக் காட்டி, இந்தியாவில் தனது புகழும் செல்வாக்கும் கிடைக்க வேண்டும் என விரும்புகிறார். அதேபோல் அமெரிக்க இந்தியர்கள் வழியாகத் தனக்குக் கிடைக்கும் புகழ், ஆதரவைப் பயன்படுத்தி, அமெரிக்காவில் தனது இனவாதக் கொள்கைக்கு வலிமை சேர்க்க டிரம்ப் விரும்புகிறார்.

இந்துத்துவா கொள்கையை அழுத்தமாக ஆதரித்து வரும் அமெரிக்க இந்தியர்களில் பெரும்பான்மையினர் உயர்ஜாதிக்காரர்கள் (பார்ப்பனர்கள்). இவர்கள் அமெரிக்காவில் தங்களுக்கான 'மைனாரிட்டி' உரிமைக்கு குரல் கொடுக்கிறார்கள். ஆனால் இந்தியாவில் மைனாரிட்டிகளுக்கு எதிராக 'இந்துத்துவா' பேசும் மோடியின் கொள்கையையும் முழுமையாக ஆதரிக்கிறார்கள். இவர்களே வெள்ளையர்களே உயர்வானவர்கள் என்ற டிரம்பின் நிறவெறி கொள்கையால் இந்தியர்கள் தாழ்வுக்குள்ளாகிறார்கள் என்றும் குமுறுகிறார்கள். டிரம்பின் இந்த நிறவெறிக் கொள்கையால் தங்களுக்கான 'குடி உரிமை' வழங்குவதிலும் பாஸ்போர்ட் வழங்குவதிலும் பாகுபாடு காட்டப்படுகிறது என்று கூறுகிறார்கள். மோடி, இவர்களின் கோரிக்கை நியாயம் என்று கூறி தனது ஆதரவை வெளிப்படுத்தி இரு நாடுகளுக்கும் இடையிலான நட்புறவுக்கான பேச்சு வார்த்தைகளில் இந்தக் கோரிக்கைகளை வலியுறுத்துகிறார். அதே நேரத்தில் அமெரிக்க ஜனநாயக சக்திகள் இந்தியாவில் காஷ்மீரில் வாழும் மக்கள் உட்பட பல்வேறு இனப் பிரிவினரின் ஜனநாயக உரிமைகளை மறுக்கக் கூடாது என்று கூறினால் அமெரிக்காவின் உயர்ஜாதி இந்தியர்கள் (பார்ப்பனர்), இந்தியாவைப் பற்றி பேச உங்களுக்கு உரிமையில்லை; வாயை மூடுங்கள் என்று கடுமையாக எதிர்க்கிறார்கள். இத்தனைக்கும் இந்தியாவில் புறக்கணிப்புக்கு உள்ளாகும் சிறுபான்மையினர், இந்த அமெரிக்க வாழ் உயர் ஜாதியினரைப்போல் அமெரிக்க 'விசுவாச' உறுதி மொழியை ஏற்காதவர்கள்; இந்தியாவுடனேயே தங்களை குடிமக்களாக இணைத்துக் கொண்டவர்கள்.

அமெரிக்க காங்கிரசில் கலிபோர்னியா மாநிலத்தின் பிரதிநிதியாக தேர்வு செய்யப்பட்ட ரோகன்னா (Rokhanna)வை குறி வைத்து அமெரிக்க வாழ் 'இந்துத்துவா'வாதிகள் தாக்குகிறார்கள். அமெரிக்காவின் பன்முகக் கலாச்சாரம் பாதிக்கப்படக் கூடாது என்று வலியுறுத்தும் இவர், இந்தியாவை இந்துத்துவ நாடாக மாற்றப்படுவதைக் கடுமையாக எதிர்த்துப் பேசி வருகிறார்.

பல்வேறு கலாச்சார அடையாளங்களைக் கொண்டவர்கள், இணைந்து வாழ்கிறார்கள் என்பது தன் முதிர்ச்சியான ஜனநாயக நாட்டுக்கான பெருமை, சமூகத்தைப் பாகுபடுத்துவது அல்ல; இந்தியாவில் வேத காலத்துக்குப் பிறகு குடியேறியவர்கள் ஆரியர்கள். ஆரியர் குடியேற்றத்துக்கு முன்பே ஹரப்பா, மொகஞ்சதாரோவில் பூர்விகக் குடிகள் தனித்த அடையாளங்களுடன் வாழ்ந்ததற்கான சான்றுகள் அகழ்வாராய்ச்சியில் கிடைத்துள்ளன.

***பூர்வீகக் குடிகளின் அடையாளங்களை சிதைத்த ஆரியர்கள், இந்தியாவை இந்துத்துவ நாடாக மாற்ற வேண்டும் என்கிறார்கள். பிற மத இன அடையாளங்களோடு வாழ்வோர் உரிமைகளை மறுக்கிறார்கள். அதே நேரத்தில் அமெரிக்காவில் தங்களுக்கு சிறுபான்மையினருக்கான உரிமை வேண்டும் என்கிறார்கள். சிறுபான்மையினர் அடையாளத்தை அழிக்கும் மோடிக்கு பேராதரவை வெளிப்படுத்துகிறார்கள். பிறந்த நாடான இந்தியாவுக்கு விசுவாசமாக இருக்க மாட்டேன் என்று எழுதிக் கொடுத்து, அமெரிக்காவில் குடியுரிமை பெற்றவர்களும் இவர்கள்தான்.***

செப். 21, 2019 'இந்து' ஆங்கில நாளேட்டில் வர்கீஸ் கே. ஜார்ஜ் எழுதிய கட்டுரையின் சுருக்கமான தமிழ் வடிவம்.
தமிழில் 'இரா'

# பழனி முருகனுக்கே மொட்டை போடும் புரோகிதர்கள் கூட்டம்

***தமிழ்நாட்டில் பக்தர்கள் அதிகம் கூடும் அறுபடை வீடுகளில் ஒன்று பழனி முருகன் கோயில். அதிக வருமானம் வரக்கூடிய கோயிலும் கூட!***

இந்தக் கோயிலில் 32 பார்ப்பன அர்ச்சகக் குடும்பங்கள் ஒவ்வொரு நாளும் பூஜைகளையும் சடங்குகளையும் நடத்தி வருகின்றன. 32 பார்ப்பன அர்ச்சகர்கள் யார்? அவர்கள் பெயர் என்ன? முகவரி என்ன? என்பது குறித்து தங்களிடம் எந்தப் பதிவேடுகளும் இல்லை என்று கோயில் நிர்வாகம் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கேட்கப்பட்டபோது பதில் அளித்துள்ளது. அருண்பாண்டியன் என்பவர் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் இந்தத் தகவல்களைக் கேட்டார்.

இந்த 32 அர்ச்சகப் பார்ப்பனர்களும் அர்ச்சகர்களாக நியமிக்கப்பட்டதற்கான அரசு ஆணைகளும் இல்லை. ஒரு அர்ச்சகர் முதுமை அடைந்து விட்டால் தனது குடும்பத்தின் சட்டபூர்வ வாரிசுகளுக்கு அவரே அர்ச்சகர் உரிமை வழங்கிவிடுகிறார். அர்ச்சகர் பதவி, பரம்பரை அடிப்படையில் வழங்கப்படக் கூடாது என்று ஏற்கனவே உச்சநீதிமன்றம் 1971ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சியில் கொண்டு வரப்பட்ட அனைத்து ஜாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற சட்டத்தின் மீதான வழக்கில் தீர்ப்பளித்துள்ளது. ஆனாலும் பழனி கோயிலில் உச்சநீதிமன்றத் தீர்ப்புகள் குப்பைக் கூடையில் வீசப்பட்டுள்ளன.

அர்ச்சகர்கள் பக்தர்களிடம் 'தட்சணை' (புரோகித இலஞ்சம்) வாங்கலாம் என்று விதி ஏதும் இல்லை. ஆனால் தட்சணை வாங்குகிறார்கள். 'அபிஷேகம் மற்றும் ஆராதனை'க்காக விற்கப்படும் டிக்கட்டுகள் வழியாக வரும் வருமானத்தையும் இந்த 32 குடும்பங்களும் பங்கு போட்டுக் கொள்கின்றன.

எதற்கெடுத்தாலும் ஆகம விதிகளை மீறக்கூடாது என்று உச்சநீதிமன்றம் போகும் பார்ப்பனர்கள், கோயில் அர்ச்சகர்கள் 'ஆகம விதிகள்' வேத சாஸ்திரங்களை அறிந்தவர்கள்தானா என்பதற்கு உரிய தகுதியோ, அதற்கான தேர்வுகளோ சான்றுகளோ தேவையில்லை என்கிறார்கள். 'பிராமணராக' இருப்பது மட்டுமே ஒரே தகுதி.

பழனிமுருகன் கோயில் வேத பார்ப்பனர்களைக் கடுமையாக எதிர்த்த சித்தர்களின் கோயில். முருகனின் சிலையை 'நவபாஷாணங்களை'க் கொண்டு, அதாவது நோய் தீர்க்கும் மூலிகை மற்றும் படிமங்களைக் கொண்டு முருகன் சிலையை உருவாக்கியவர், சித்தர் மரபில் வந்த 'புலிப்பாணியார்'.

1623ஆம் ஆண்டு திருமலைநாய்க்கர் ஆட்சிக் காலத்தில் தளபதியாக இருந்த ராமப்பையய்ர் என்ற பார்ப்பனர், பழனி கோயிலுக்கு தரிசனத்துக்கு வந்தார். அங்கே சித்தர் மரபினர்கள் வழிபாடு நடத்தியதைக் கண்டு அதிர்ச்சியடைந்தார். ஒரு 'பிராமணனாகிய' நான் 'பிராமணரல்லாத' சித்தர்களிடமிருந்து விபூதியை வாங்க மாட்டேன் என்று கூறி ஊர் திரும்பி, அவர்களை கோயிலிலிருந்து வெளியேற்றி, சில 'பிராமண' புரோகிதர்களை அர்ச்சகர்களாக்கினார். அன்று முதல் சித்தர் கோயில் பார்ப்பனர் கோயிலானது. பழனி கோயிலுக்கான திருத்தல வரலாற்று நூலிலேயே இத்தகவல் பதிவாகியுள்ளது.

மூலிகைகளால் உருவாக்கப்பட்ட முருகன் சிலையை அகற்றி, தங்கத்தாலான முருகன் சிலையை நிறுவ இறந்து போன காஞ்சி மடத்தின் ஜெயேந்திரன் ஏற்பாடுகளை செய்தார். இதற்கு ஜெயலலிதா ஆட்சியும் துணை நின்றது. அப்போதே கடும் எதிர்ப்புகள் எழுந்தன. பெரியார் திராவிடர் கழகம், அப்போது சங்கராச்சாரியை எதிர்த்து பழனியிலேயே கண்டனக் கூட்டம் நடத்தியது. கொளத்தூர் மணி, விடுதலை இராசேந்திரன், கோவை இராமகிருட்டிணன் உள்ளிட்ட பலரும் பேசினர். புலிப்பாணியார் மரபில் வந்த பழனி கோயிலுக்குரிய சித்தரும் அதே கூட்டத்தில் பங்கேற்றுப் பேசினார்.

தங்கத்தால் செய்யப்பட்ட முருகன் சிலையில் 200 கிலோ தங்கம் மோசடி செய்யப்பட்டது. தங்கத்தில் வேறு உலோகங்கள் கலக்கப்பட்டன என்று சென்னை 'அய்.அய்.டி.' ஆய்வகத்தில் நடத்திய சோதனையில் கண்டறியப்பட்டது. இந்த மோசடிகள் குறித்து சிலை திருட்டுகளை தடுக்கும் சிறப்பு விசாரணைக் குழு விசாரணைகளை நடத்தி வருகிறது. மோசடிக்கு பழனி கோயில் பார்ப்பன அர்ச்சகர்களும் உடந்தையாக இருந்தது தெரிய வந்துள்ள நிலையில் கோயில் அர்ச்சர்கள் பற்றிய விவரங்களோ பதிவுகளோ கோயில் நிர்வாகத்திடம் இல்லை என்று இப்போது கூறுகிறார்கள். குற்றவாளிகளைத்தப்பவிடுவதே இதன் நோக்கம் என்று சிறப்புக் காவல்துறை வட்டாரங்கள் கூறுகின்றன.

'ஆகமம்', 'ஆச்சாரம், 'சாஸ்திரம்' என்று புனிதங்களைப் பேசும் பார்ப்பனர்கள், எத்தகைய நேர்மையானவர்கள் என்பதற்கு இதைவிட வேறு சான்று வேண்டுமா?

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/19-21 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2019-2021
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# அக்.2 ஆர்ப்பாட்டத்துக்கு தயாராவீர்! தோழர்களே!

- அனைவருக்குமான கல்வி, சமத்துவத்துக்கான கல்வி பற்றிப் பேசியது எல்லாம் போதும்; சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்தே அதையே பேச வேண்டுமா? அதைவிட தரமான கல்விதான் இப்போது முக்கியம் என்கிறது - புதிய கல்விக் கொள்கை.
- போதுமான மாணவர்கள் வராத பள்ளிகளை இழுத்து மூடிவிட்டு வேறு பள்ளிகளுடன் இணைத்து விட வேண்டும் என்கிறது புதிய கல்விக் கொள்கை. இராஜகோபாலாச்சாரி பள்ளிகளை மூடிய அதே காலத்துக்கு மீண்டும் இழுத்துச் செல்கிறது, இந்தக் கல்விக் கொள்கை.
- 5ஆம் வகுப்பிலே பொதுத் தேர்வு நடத்த வேண்டுமாம்; தேர்ச்சி பெறும் வரை அதே வகுப்பில் குழந்தை மீண்டும் மீண்டும் படிக்க வேண்டுமாம்; இந்தத் தேர்வுக்குக் கட்டணம் செலுத்த வேண்டுமாம்; இப்படிக் கூறுகிறது, இந்தக் கல்விக் கொள்கை.
- 1953இல் 5ஆம் வகுப்பு வரை படிக்கும் பள்ளிச் சிறுவர்கள், பிற்பகலில் அரை நேரம் அவரவர் பெற்றோர் செய்த குலத் தொழிலை செய்ய உத்தவிட்டார் இராஜ கோபாலாச்சாரி. 5ஆம் வகுப்போடு மாணவர்களைப் பள்ளியிலிருந்து விரட்ட அவர் செய்த சூழ்ச்சியை 2019இல் பொதுத் தேர்வு வழியாக



நுழைக்கிறது - புதிய கல்விக் கொள்கை.

- தமிழ்நாட்டில் நடக்கும் அ.இ. அ.தி.மு.க ஆட்சி ஏற்கனவே தமிழ்நாட்டில் 46 பள்ளிகளை இழுத்து மூடிவிட்டது. ஆமாம் புதிய கல்வித் திட்டம் அமுலாவதற்கு முன்பே தமிழ்நாட்டில் செயல்படத் தொடங்கிவிட்டது.
- பண்டையக் கல்வி முறையின் பெருமை பேசுகிறது. இந்தக் கல்விக் கொள்கை 'பிராமணர்'களுக்கு வேதம் கற்பிப்பது மட்டுமே - பண்டைய கல்வி முறை. 'சூத்திரர்கள்' படிக்க பள்ளிக் கூடங்கள் உருவானதே பண்டைய முறையான வேத கல்வி முறையை மாற்றியமைப்பதற்குத்தான். பண்டைய கல்வி முறை பெருமைக் குரியது அல்ல; மாறாக சிறுமைக் குரியது.
- வேத காலத்திலேயே இந்தியர்கள் ஆய கலைகள் அனைத்திலும் சிறந்திருந்ததாகவும், கணிதம், மருத்துவம் உள்ள துறைகளில் உலகுக்கே வழிகாட்டியதாகவும் பெருமை பேசுகிறது. கல்விக் கொள்கை; சமஸ்கிருத மொழியையும் சமஸ்கிருத இலக்கியத்தையும் பாடத் திட்டத்தில் சேர்த்து, இந்தியக் கலாச்சாரப் பெருமைகளை உணர்த்த வேண்டும் என்கிறது - இந்தக் கல்விக் கொள்கை. இது புதிய கல்விக் கொள்கையா? வேத காலத்துக்கு இழுத்துச் செல்லும் அறிவியலுக்கு எதிரான பார்ப்பன கல்விக் கொள்கையே!
- சமஸ்கிருதக் கல்வி இந்தியாவை என்றென்றும் இருளில் ஆழ்த்தி விடும் என்றார், உடன்கட்டை ஏறும் கொடுமையை ஒழிக்கப் பாடுபட்ட இராஜாராம் மோகன் ராய். இவரும் ஒரு வங்காளிப் பார்ப்பனர்தான். அறிவியலை சிதைக்கும் வேதக் கல்வி - கழுதையைத் தொட்டு விட்டால் அதற்குப் பரிகாரம் செய்வது எப்படி? ஆடு கொல்லப் பட்டால் எந்த வேதப் பாடலைப் பாட வேண்டும் என்று கூறுவதைத் தவிர சமஸ்கிருதக் கல்வியில் வேறு என்ன இருக்கிறது என்று கேட்டார், பிரிட்டிஷ் அதிகாரி மெக்காலே.
- உயர்கல்வியை கார்ப்பரேட் மயமாக்க பரிந்துரைக்கின்றன. இந்தக் கல்விக் கொள்கை இடஒதுக்கீட்டுக் கொள்கைகளை உயர்கல்வியில் அமுல்படுத்தக் கூடாது என்கிறது.
- எட்டாம் வகுப்பு பொதுத் தேர்வில் தேர்ச்சி பெறாதவர்கள் மண் பாண்டம் செய்தல்; தச்சு வேலை செய்தல் போன்ற தொழிலுக்கு பரிந்துரைக்கிறது - இந்தக் கல்விக் கொள்கை. இது பள்ளிப் படிப்பை பாதியில் நிறுத்திவிட்டு உடல் உழைப்புக் கூலித் தொழிலுக்கு விரட்டி அடிக்கும் சூழ்ச்சி அல்லவா?
- சமூக சேவகர்களை பள்ளிகளில் கல்விப் பயிற்சிக்குப் பயன்படுத்தலாம் என்ற போர்வையில் ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் கல்விக் கூடத்தில் நுழைய கதவு திறந்து விடுகிறது இந்தக் கல்விக் கொள்கை.

சமூக நீதி மண்ணான தமிழ்நாடு இதை எப்படி ஏற்கும்?

புதிய கல்வி என்ற பெயரால் புற்றிலிருந்து புறப்பட்டு படம் எடுத்தாடும் வர்ணாஸ்ரமக் கல்வி நகலை கிழித்து குப்பைக் கூடையில் வீசுவோம்.

கல்விப் புரட்சிக்கு வித்திட்ட நமது நன்றிக்குரிய காமராசர் நினைவு நாளான அக்.2ஆம் தேதி புதிய கல்விக் கொள்கை நகல் கிழிப்பு ஆர்ப்பாட்டம்.

**பள்ளிப்பாளையம் மாநாட்டுத் தீர்மானத்தை செயல்படுத்த, தோழர்களே தயாராவீர்!**

## ஆர்.எஸ்.எஸ். பாசிசத்துக்கு துணை போகிறார்: மோடிக்கு அமெரிக்காவில் எதிர்ப்பு

சுமார் 50,000 பேர் கலந்துகொண்ட பேரணி இந்திய பிரதமர் மோடி அவர்களை டெக்ஸஸ் மாகாணத்தில் "Howdy Modi" (நலமா மோடி) என்ற நிகழ்ச்சியில் பாராட்டி கவுரவித்தது. இந்த நிகழ்ச்சி நடப்பதற்கு சில நாட்களுக்கு முன் இதுபற்றிய கருத்தரங்கு ஒன்றை பாஸ்டன் நகர மேயர் மார்ட்டின் வால்ஷ் நடத்தினார். பலரும் தம் கருத்துக்களை பகிர்ந்த அந்த அரங்கில் கீழ்க்கண்ட கருத்து ஒரு டெமோக்ரடிக் கட்சி உறுப்பினரால் முழங்கப்பட்டது. காணொளியில் வெளி வந்த அவரது உரையின் சில பகுதிகள்.

"கடந்த மாதம், டெக்சாஸின் எல்-பாஸோ நகரில் ஒரு வெள்ளை நிற வெறி பயங்கரவாதி 22 பேரைக் சுட்டுக் கொன்றான். தன் செயலுக்குக் காரணமாகவும் தூண்டுதலாகவும் அமைந்தது, நியூசிலாந்தின் கிறிஸ்ட் சர்ச் மசூதியில் 51 பேர் கொல்லப்பட்ட சம்பவம் என்று தன் வாக்குமூலத்தில் குறிப்பிட்டான். நியூசிலாந்தில் கோர தாண்டவமாடிய மனிதனோ, 2011இல் நார்வே நாட்டில் 77 பேர் கொல்லப்பட்ட செய்திதான் இந்த படுகொலை செய்ய தன்னைத் தூண்டியதாக வாக்குமூலம் அளித்தான்.

நார்வேயில் இரத்த ஆற்றை ஓட்டிய பயங்கரவாதி ஆண்டர்ஸ் ப்ரீவிக், உலகெங்கிலும் உள்ள வலதுசாரி தீவிரவாதிகள் மற்றும் தேசியவாத குழுக்களால் எவ்வாறு ஈர்க்கப்பட்டேன் என்பதை விவரித்து ஒரு அறிக்கையையே வெளியிட்டிருந்தான். பயங்கரவாதி ப்ரீவிக் தன் அறிக்கையில், இந்தியாவின் ஆர்.எஸ்.எஸ் அமைப்பை தன் முன்மாதிரியாக சுட்டிக்காட்டியிருந்தான். மேலும், ஆர்.எஸ்.எஸ் இயக்கத்தின் "வலதுசாரி இந்து தேசியவாதம்" மற்றும் இந்தியாவை "இந்து தேசமாக" மாற்றியமைக்க முற்படும் அதன் குறிக்கோளை அவன் அதில் புகழ்ந்து பாராட்டியிருந்தான் .

ஆர்.எஸ்.எஸ் என்பது 1925ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட ஒரு பாசிச துணை இராணுவம் (para military) ஆகும். அதே ஆண்டில்தான் ஹிட்லர் தன்னுடைய "மெய்ன் காம்ப்"ஐ வெளியிட் டிருந்தான். ஆர்.எஸ்.எஸ் அமைப்பானது ஜெர்மானிய நாஜிக்களின் அதே வெறித்தனம் மற்றும் உத்வேகத்துடன் உருவாக்கப்பட்டது. அந்த கருத்தியல்தான் இப் போது நரேந்திர மோடியை பெற்றெடுத்து உருவேற்றியிருக்கிறது.



2002இல் மோடி தலைமையில் ஆர்.எஸ்.எஸ் படையினர் குஜராத் மாநிலத்தில் 2,000 முஸ்லீம்களை படுகொலை செய்தார்கள். அவர்கள் பெண்களை கும்பல் கும்பலாக பாலியல் பலாத்காரம் செய்தனர், சிறுவர்களை தெருவீதிகளில் உயிருடன் எரித்தனர். அந்த கலவரத்தை முன்னின்று நடத்தியவர்கள் பின்நாட்களில் ஊடகங்களில் மோடி அரசுதான் இதை ஊக்குவித்தது, செயல்படுத்த பணித்தது என வாக்குமூலமும் அளித்தனர். இந்த கொடுஞ்செயலுக்காக மோடிக்கு அமெரிக்காவிற்குள் நுழைய 10 ஆண்டுகள் தடையும் நம் அரசால் விதிக்கப்பட்டது.

இன்று மோடியின் நாசகார இரும்புக்கர ஆட்சியின் கீழ் பல்வேறு சிறுபான்மையினருக்கு எதிராக வெறுக்கத்தக்க வன்முறைகளும், படுபாதக செயல்களும் திட்டமிட்டு அரங்கேற்றப்படுகின்றன. ஆர்.எஸ்.எஸ்ஸின் மேலாதிக்கத்தை ஏற்றுக்கொள்ளாத ஒவ்வொரு இந்தியரும் தங்கள் உயிருக்கும் உடமைக்கும் அஞ்சி வாழ்கின்றனர். இன்று மோடியை வரவேற்க கையை அசைப்பவர்களை, அவர் செய்த குற்றங்களுக்கு உடந்தையாக இருந்தவர்களாகவே வரலாறு பதிவு செய்யும். இரத்தக் கறை படிந்த அவரின் கைகளோடு கரம்கோர்த்த இவர்களால் ஒருபோதும் இந்த அழுக்கைக் கழுவ முடியாது.

பிஷப் டெஸ்மண்ட்டிட் ஒருமுறை, "அநீதி அரங்கேறும் சூழல்களில் நீங்கள் நடுநிலை வகித்தால், நீங்கள் ஒடுக்குமுறையாளரின் பக்கத்தையே தேர்ந்தெடுத்துள்ளீர்கள்" என்று கூறினார். எனவே நீங்கள் மோடிக்கு விரிக்கும் சிவப்பு கம்பளம் நியாயமானதுதானா என்பதை கொஞ்சம் எண்ணிப் பாருங்கள்? Houston நகரம் ஹவுடி மோடி (மோடி நலமா) என்று சொல்வதைவிட ஆடியோஸ் மோடி (குட்பை மோடி) என்று சொல்வதே பொருத்தமாக இருக்கும்! (ஹவுடி மோடிக்கு எதிரான ஆர்ப்பாட்டத்திற்கு 25,000 பேர் கூடுமளவுக்கு இடம் ஒதுக்கித் தர கோரிக்கை வைக்கப்பட்டது. கோரிக்கையை ஏற்று மேயர் ஒதுக்கித் தந்தார்.)

## இந்தியாவின் ஒற்றை மொழி இந்தி அல்ல; 'இந்து' என்போரின் ஒற்றை மொழியும் சமஸ்கிருதம் அல்ல

*20.9.2019 அன்று நாமக்கல் மாவட்டம் பள்ளிபாளையத்தில் திராவிடர் விடுதலைக் கழகம் நடத்திய மண்ணின் மைந்தர்கள் உரிமை முழக்க பரப்புரைப் பயண நிறைவு மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்.*

ஒரே நாடு - ஒரே வரி - ஒரே தேர்வு - ஒரே கல்வி - ஒரே குடும்ப அட்டை - ஒரே பண்பாடு என்பதன் தொடர்ச்சியாக ஒரே மொழி என்ற ஒற்றை இந்தியாவை உருவாக்கும் நோக்கத்தோடு செயல்படும் நடுவண் ஆட்சி, இந்தியை ஒற்றை அடையாளமாகத் திணிக்கத் தொடங்கி விட்டது. இந்தி எதிர்ப்பில் களம் பல கண்ட தமிழ்நாடு இந்தித் திணிப்பை ஒன்றுபட்டு எதிர்த்து வருவது பாராட்டுக்கும் பெருமைக்கும் உரியதாகும். அதுபோலவே இறை நம்பிக்கை கொண்ட தமிழர்கள் தங்கள் குடும்ப நிகழ்வுகளிலும், அவர்கள் நடத்தும் வழிபாடுகளிரும் ஒற்றை இந்து பண்பாடாக பார்ப்பனியத்தால் திணிக்கப்படும் சமஸ்கிருத புரோகிதத்தைப் புறம் தள்ள வேண்டும் என்று இம்மாநாடு இறை நம்பிக்கைக் கொண்ட பார்ப்பனரல்லாதாரை கேட்டுக் கொள்கிறது. குழந்தைகளுக்கு தமிழ்ப் பெயர்களையும், சமுதாய புரட்சிக்கு உழைத்த தலைவர்களின் பெயர்களையும் சூட்டி தமிழர்கள் தங்களின் சுயமரியாதை அடையாளத்தை வெளிப்படுத்த வேண்டும் என்றும் இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 27th September 2019

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN